# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

## 2021 ஜனவரி ~ மார்ச் வெளியீடு

கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை
நீர் கைவிடுகிறதில்லை:
ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள்
உம்மை நம்பியிருப்பார்கள்.
சங்கீதம் 9:10

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக் கூடிய **“ஜீவ ஒளி”** சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை தங்கள் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கூடாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
(+94) 773595533
cfellowship@sltnet.lk
www.christianfellowshipcentre.com

# பொருளடக்கம்


4 வழிகாட்டும் விடிவெள்ளி

5 மன்னித்தல்

6 கிறிஸ்து இயேசுவின் எதிர்ப்பார்ப்பு

8 விசுவாச முயற்சியின் முக்கியத்துவம்

10 நன்றி சொல்லும் நாவை எனக்கு தாருமே

12 விரும்பாத திருப்பம்

15 சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்

17 பரிசுத்த நகரம்

18 காலத்தின் சோதனை

20 தேவனுக்கு முன்பாக எமது நிலை

21 வாக்குத்தத்தங்கள் 2021

# வழிகாட்டும் விடிவெள்ளி

## கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும் உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். சங்கீதம் 25:4

மற்ற சூழ்நிலைகள் மாறாதிருக்கும் போது தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்றினால் உனக்கும் இவ்விதமாகவே நிகழும். ஒவ்வொரு நாளும் நான் இவ்விதமாகவே சொல்லக் கற்றுக்கொண்டேன். "இப்பொழுதும் என் ஆண்டவரே! இந்த நாளிலும் நான் செல்ல வேண்டிய பாதையை எனக்குக் காண்பித்தருளும். நான் முழுவதும் இயலாதவனாக இருக்கிறேன். நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர் என்று எனக்குத் தெளிவாக காண்பித்தருளும். நான் எங்கே போக வேண்டும், என்ன பேச வேண்டும்?" என இவ்வாறாக பரலோக திட்டத்தை அறிந்து கொண்ட பின்னர் நான் அப்படியே அதற்குக் கீழ்ப்படிகிறேன். அன்று இரவு வரும் போது மறுபடியும் நான் முழங்காலில் நின்று இதே கேள்வியைக் கேட்கிறேன். கர்த்தாவே! இன்றைக்கு என்னுடைய அன்பு உம்மைத் திருப்தி செய்ததா? என் சேவையில் உமக்கு பூரண மகிழ்ச்சி உண்டா? ஆண்டவரே! நீர் பூரண திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்திருக்கிறீரா என்பதைத் தயவுகூர்ந்து எனக்கு இப்போதே சொல்ல வேண்டும்.

கிறிஸ்துவே பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம் ஆவார். நீங்கள் எப்பொழுதாவது கிராமங்களில் வசித்திருக்கிறீர்களா? அங்குள்ள குடியானவர்கள் எவ்வேளையிலும் கடியாரங்களை பார்த்துக்கொண்டிருப்பதில்லை. அவர்கள் அதிகாலையில் வயலுக்கு செல்லும்பொழுதோ விடிவெள்ளி நட்சத்திரத்தைப் பார்த்தே நேரத்தைக் கணக்கிடுகிறார்கள் அவர்கள் செல்ல வேண்டிய திசையையும் அதே நட்சத்திரத்தைக் கொண்டே கணக்கிடுகிறார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நம்முடைய வாழ்க்கையில் பெரிதும் பிரகாசமுமான விடிவெள்ளியாக உதிக்கிறார். துவக்கத்தில் சிறிது இருள் சூழ்ந்திருப்பதாகத் தோன்றினாலும் சீக்கிரத்தில் அது மறைந்து போகிறது. மறுபடியும் பிறந்த உடனேயே ஒருவரும் பூரணராகி விடுவதில்லை. ஆதலால், நம்மைச் சூழ இருள் இருந்தாலும், சீக்கிரத்தில் வரப்போகிற சூரியோதயத்திற்கு முன் அடையாளமாகவே விடிவெள்ளி நட்சத்திரம் தோன்றியுள்ளது. ஓரிரு மணி நேரத்தில் கதிரவன் தன் முழு சக்தியுடன் பிரகாசிக்க ஆரம்பித்துவிடுவான். ஆதலால், விடிவெள்ளியைக் கண்டவுடன் நம்முடைய துக்கங்கள் கவலைகள் சந்தேகங்கள் எல்லாம் மாறி மனித உதவி இல்லாமலே நாம் வெற்றி நடை போட முடியும். நாம் எவ்வளவுக்கதிகமாக கீழ்படிகிறோமோ அவ்வளவாக தெய்வீக ஒளியைப் பெற்றுக்கொள்வோம்.

"அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது. அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்." ஓசியா 6:3

- Bro. Bakth Singh -



# மன்னித்தல்

மன்னித்தல் எவ்வளவு ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட அனுபவம் என்பதையும், அது எவ்வாறு நாம் முன்னதாகவே பரலோகத்தை ருசித்துப் பார்க்கும்படி செய்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுவதற்காகவே இத்தொடர் எழுதப்படுகிறது. நாம் பிறரை மன்னிக்க முடியாத ஒரு ஆவியை உடையவர்களாயிருப்பதால் நமக்கு ஏற்படக்கூடிய பல அபாயங்கள் இத்தொடரில் வெளியரங்கமாக்கப்பட்டு இருக்கின்றன. இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டு இந்தப் பூமியிலே பரலோகத்தை அனுபவிக்கிற ஜீவியத்திற்கு வழி நடத்தப்பட வேண்டுமென ஜெபிப்போம்.

மன்னிப்பு என்பது வேதாகமத்தில் உள்ள மிக அற்புதமான ஒரு வார்த்தை ஆகும். அது இல்லாத பட்சத்தில் பரலோகத்தின் வாசல் மனுக்குலத்திற்கு அடைக்கப்பட்டிருக்கும். மேலும், இந்த உலகத்திற்கு கிறிஸ்து செய்த அருட்பணி அர்த்தமற்றதாய் இருக்கும். சிலுவையில் கர்த்தராகிய இயேசு பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே (லூக்கா 23:34) என்றுரைத்த போது ஒரு வேளை தேவ தூதர்கள் அதை விளங்கிக்கொள்ள முடியாமல் இருந்திருக்கக் கூடும். இருப்பினும் அது பாவிகளை பரலோகத்திற்குக் கொண்டு வந்தது.

ஆம்! மன்னித்தல் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்டதொன்றாகும். ஏனெனில், அது இருளை வெளிச்சமாகவும், குழப்பத்தை சமாதானமாகவும், பயத்தை விசுவாசமாகவும் துக்கத்தை சந்தோஷமாகவும், நம்பிக்கையிழந்த நிலையை நம்பிக்கையுள்ளதாகவும், பகையை அன்பாகவும், வியாதியை ஆரோக்கியமாகவும், பெலவீனத்தை பெலனாகவும், ஒரு பாவியை பரிசுத்தவானாகவும் நரகத்தை பரலோகமாகவும் மாற்றுகிறது.


மன்னிப்பு எனும் வார்த்தையின் கருத்தென்ன? (Forgiveness) என்ற வார்த்தைக்கு விட்டுவிடுதல், (கடனை திரும்பி செலுத்தும்படி கேட்காமல் விட்டுவிடுதல்) குற்றம் புரிந்த ஒரு நபருக்கு இரங்கி அவனை தண்டிக்காமல் விட்டுவிடுதல் "remit" let off (a debt, a person) என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இப்பதத்திற்கு தேவன் தரும் அர்த்தம் இதைக்காட்டிலும் அதிகமாக மனக்கண்களை பிரகாசிக்க செய்வதாய் இருக்கிறது.

மெய்யான மன்னிப்பு என்றால், தவறிழைத்தவர் மேல் உள்ள எந்த ஒரு பழிவாங்கும் எண்ணத்தையும், மனப்பான்மையையும் அடியோடு அழித்து விடுதலும், புண்பட்ட மனதின் காயங்கள் அனைத்தையும் குணமாக்குதலும், அவரிடத்தில் திரும்பவும் அன்பு பாராட்டி, அவரோடு முன்னிலும் அதிக மேன்மையான, தூய்மையான ஒரு அன்பின் உறவை வைத்துக்கொள்ளுதலும் ஆகும்.

- Paul Sebastian -

# பாவம் முழுதும் மன்னித்து இரட்சித்த
# கிறிஸ்து இயேசுவின் எதிர்ப்பார்ப்பு

கிறிஸ்துக்குள் பிரியமானவர்களே! இந்த ஜீவ ஒளி சஞ்சிகையினூடாக உங்களோடு இணையக் கொடுத்த தேவனுக்கே மகிமையை செலுத்து-கிறேன். ரோமர் 4:7,8 "எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்-கிறாரோ, அவன் பாக்கியவான் இயேசு கிறிஸ்து எமது பாவங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்தார்.

நல்லவன் கெட்டவன் திருடன், கொலைகாரன் எல்லாரையும் அவரு-டைய இரத்தத்தால் சுத்திகரித்தார்.

ஒரு தந்தை தன் மகன் செய்த குற்றத்திற்காக அவனை ஒரு மணி நேரம் அறையில் தனிமையில் இருத்தி விட்டார். ஒரு மணி நேரம் கழித்து வெளியே வந்த அம்மகன் தந்தையே! என்னுடைய தவறுகளை இத்தாளிலே எழுதியுள்ளேன் என அதை கொடுக்க அத்தந்தை அத்தாளை கவனிக்காமல் ஒரு அழி இறப்பரை எடுத்து மகன் எழுதியிருந்த அனைத்தையும் அழித்து திரும்ப மகனிடம் கொடுத்து, "மகனே! எல்லாவற்றையும் மன்னித்து விட்டேன். இனி நீ நல்லவன்" என கூறி அனுப்பி வைத்தார். அதே போல் தான் நம் கடவுளின் மனதும் கூட.

எபேசியர் 3: 18, 19 "சகல பரிசுத்த-வான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமை-யினுடைய ஐசுவரியத்தின் படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டும் என்று வேண்டிக்கொள்ளு-கிறேன்."

சகோதரர்களே! "ஓ! தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்." எனும் பல்லவியை பாடியவரும் ஒரு தூக்கு தண்டனை கைதியாவார். அவர் தேவனை அறிந்து கொண்டார். அவர் சிறைச்-சாலையில் இருந்த அந்த நிலைமை-யிலும் கூட, தன்னை இரட்சித்த தேவனை மகிமைப்படுத்தி, தான் அடைந்த இரட்சிப்பை மற்றவர்களுக்கு பாடலினூடாக சுவிசேஷமாக கூறினார்.

ஆம்! நாம் அடைந்த இரட்சிப்பை சாதாரணமாக நினைத்து விட முடியாது. அந்த இரட்சிப்பில் இயேசு கிறிஸ்து-வானவரின் பாடுகள், வேதனைகள், சித்திரவதைகள் உள்ளன.

ஏசாயா 53:5-7 "நம்முடைய மீறுதல்-களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமா-தானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாம் எல்லாரும் ஆடுகளை போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம் கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்-தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை அடிக்கப்-

படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

நமக்கு சமாதானத்தைக் கொடுத்து சாபத்தை ஏற்றுக்கொண்டார்.

பிரியமானர்களே! யோவான் 3:16ன்படி அவருடைய அன்பே எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டது. நாம் அந்த இரட்சிப்புக்காக சந்தோஷப்படவேண்டும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அதாவது இரட்சிப்படைந்த ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்கும் ஆண்டவர் கொடுத்த கட்டளையாவது, "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" மத்தேயு 28:19. அந்த பணியை நாங்கள் செயல்படுத்துகிறோமா?

அப்போஸ்தலர் 2:47ன்படி ஆதி கிறிஸ்தவர்கள் பேதுரு, பவுல், பர்னபா, எனக் கூறிக்கொண்டே போகலாம், அவர்கள் இரட்சிப்புக்கேற்ற காரியங்களை செய்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினார்கள். வேதத்தின் படி கர்த்தர் அதை அவர்களுக்கூடாக செயலாற்றினார். அப்போஸ்தலர் 2:36-47.

இரட்சிப்பு என்பது ஜீவ ஊற்று அது நம் வாழ்வில் பாய்ந்தோட வேண்டும். மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும். இதுவே, நம் எல்லோரினதும் பொறுப்பும், கடமையும் ஆகும்.

ஆத்தும ஆதாயத்தை ஜெபத்துடனும், ஆத்தும பாரத்துடனும் செய்ய தேவன் தாமே எங்களுக்கு உதவி செய்வாராக! ஆமென்.

- Devi Lavan -

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

### 1 இராஜாக்கள்

அதிகாரங்கள் : 22
வசனங்கள் : 816

**சிறப்பம்சங்கள்**

- தாவீதின் மரணம்
  1ம், 2ம் அதிகாரங்கள்
- சாலமோனின் ஆட்சிக்காலம்
  3 - 11 அதிகாரங்கள்
- தேவாலயம் கட்டப்படுதல்
  5 - 8 அதிகாரங்கள்
- இராஜ்யம் பகுக்கப்படுதல்
  12 - 14 அதிகாரங்கள்
- பிரிக்கப்பட்ட இராஜ்யங்களின் இராஜாக்கள்
  15 - 16 அதிகாரங்கள்
- எலியாவின் கதை
  17 - 19 அதிகாரங்கள்
- ஆகாபின் கதை
  20 - 22 அதிகாரங்கள்

# விசுவாச முயற்சியின் முக்கியத்துவம்

- P. M. Christopher



1. **ஒரு ஆசீர்வாதத்திற்கு முன் தேவைப்பட்டது, வரிப்பணத்திற்காக தூண்டில்போடுதல்.**

மத்தேயு 17:27
ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்கு போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார் ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய். அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.

2. **சூம்பின கை குணமளிக்கும் முன் கையை நீட்ட வேண்டும்.**

மாற்கு 3:3-5
அவர் சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: எழுந்து நடுவே நில் என்று சொல்லி அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அவன் நீட்டினான். அவன் கை மறுகையைப்போல சொஸ்தமாயிற்று.

3. **பெரியதோர் மீன் பிடிப்பிற்கு முன் சொற்படி வலை வீச வேண்டும்.**

யோவான் 21:6,11
அப்பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையை போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள். சீமோன்பேதுரு படவில் ஏறி, நூற்றைம்பத்து மூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான். இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை.

4. **குஷ்டரோகம் குணமாக ஆசாரியர்களுக்கு காண்பிக்க புறப்பட வேண்டும்.**

லூக்கா 17:14
அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.

5. **திருமணத்தில் திராட்சை ரசம் கொடுக்க தண்ணீர் நிறைக்க வேண்டும்.**

யோவான் 2:7
இயேசு வேலைக்காரரை நோக்கி: ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார். அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள்.

6. **இரட்சிப்பின் தண்ணீரை பெற்று கொள்ள தெளிவு பெற வேண்டும்.**

யோவான் 4: 16
இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்.

7. **முப்பத்தெட்டு வருட நோயாளி விசுவாசத்துடன் எழ முயற்சி செய்ய வேண்டும்.**

யோவான் 5:8
இயேசு அவனை நோக்கி:
எழுந்திரு, என்றார்.

**8. பார்வையடைய சீலோவாம் குளத்தில் போய் கழுவியாக வேண்டும்.**

யோவான் 5:8
நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான்.

**9. சகோதரன் உயிர் அடைய கல்லை புரட்டியாகவே வேண்டும்.**

யோவான் 11:39
இயேசு:
கல்லை எடுத்துப்போடுங்கள்
என்றார்.

**10. திமிர்வாதக்காரன் குணமாக எழுந்து படுக்கையை எடுக்க முயற்சித்தல் வேண்டும்.**

லூக்கா 5:24
திமிர்வாதக்காரனை நோக்கி:
நீ எழுந்து உன் படுக்கையை கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிதலே முக்கியம். கீழ்ப்படிந்தால் பெரிய ஆசீர்வாதங்களை அடையலாம். ஆமென்.

## இஸ்ரவேலரின் பண்டிகைகள் (லேவியராகமம் 23)

பஸ்கா பண்டிகை
வசனம் 5

புளிப்பில்லா அப்பப்பண்டிகை
வசனம் 6

முதற்பலன்களின் பண்டிகை
வசனம் 10

பெந்தெகொஸ்தே பண்டிகை
(வாரங்களின் பண்டிகை)
வசனம் 16 / உபாகமம் 16:16

எக்காள பண்டிகை
வசனம் 24

பாவநிவிர்த்தி செய்யும் நாள்
வசனம் 28

கூடார பண்டிகை
வசனம் 34

லேவியராகமம் பற்றிய வேதாகம ஆய்வை கற்றுக்கொள்ள bit.ly/LeviticusBibleStudy எனும் இணைப்பின் வாயிலாக இணைந்து கொள்ளுங்கள் அல்லது கீழ் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் (scan) செய்க



# நன்றி சொல்லும் நாவை எனக்குத் தாருமே



கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே பாவ மன்னிப்பு பெற்ற ஒவ்வொரு தேவ பிள்ளையும் ஒவ்வொரு நாளும் தமது தனிப்பட்ட ஜெபங்களிலும், நமஸ்கார ஆராதனைகளிலும் துதி பாடல்கள் மூலமும் தேவனுக்குத் தமது நன்றிகளை செலுத்தத் தவறுவதில்லை. இது மிகவும் நல்லது.

எனினும், தேவனுக்கு எமது நன்றிகளை செலுத்துகிற நாம் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்கு எமது நன்றிகளை செலுத்த தவறி விடுகிறாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் ஒரு தடவை 10 குஷ்டரோகிகளை அவர் குணமாக்கினார். அதில் ஒருவன் மாத்திரம் அவரிடத்தில் வந்து அவருக்கு நன்றி செலுத்தினான். இயேசு உடனே அவனிடத்தில் அவர் குணமான மற்ற ஒன்பது பேரும் எங்கே என்று ஏக்கத்தோடு அவனிடத்தில் கேட்பதை லூக்கா 17:12-18 வரையிலுள்ள வசனங்களில் வாசிக்கிறோம். இயேசு மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் நன்றி செலுத்துதலை அவர் எதிர்பார்த்தார்.

1 சாமுவேல் 18 - 20 அதிகாரங்களில் சவுல் இராஜா தாவீதைக் கொலை செய்வதற்காக போடும் ஒவ்வொரு திட்டங்களையும் சவுல் அரசனின் மகனான யோனாத்தான் தாவீதுக்கு அறிவித்து தன்னுடைய தகப்பனாகிய சவுலின் கைக்கு தாவீதை தப்பவிக்கிறதை நாம் வாசிக்கிறோம். சவுலும் அவனுடைய குமாரனான யோனத்தானும் இறந்த பின் தாவீது இஸ்ரவேலுக்கு இராஜாவாகிறதை 1 சாமுவேல் 31 மற்றும் 2 சாமு 5 ஆம் அதிகாரங்களில் காண்கிறோம். தாவீது இராஜாவாகும் போது யோனத்தான் உயிரோடு இல்லை. எனினும், தாவீது ராஜா யோனத்தான் அவனுக்கு செய்த உதவிகளை ஒரு போதும் மறக்கவில்லை. யோனாத்தான் தனக்கு செய்த உதவிகளுக்கு நன்றிக்கடனாக இரு கால்களும் முடமான யோனாத்தானின் மகனான மேவிபோசேத்திற்கு தாவீது அரசன் செய்யும் உதவிகளை 2 சாமுவேல் 9:1-13 வரை வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கும் ஊழியத்திற்கும் உதவி செய்தவர்களுக்கு நன்றி கூற ஒரு போதும் மறக்கவில்லை. ரோமர் 16 ஆம் அதிகாரத்தில் தனக்கும், ஊழியத்திற்கும் உதவி செய்த ஒவ்வொருவர்களுடைய பெயர்களையும் அவர்கள் செய்த உதவிகளையும் குறிப்பிட்டு அதற்கு நன்றி செலுத்துவதை காண்கிறோம்.

பிலிப்பியர் 2 ம் அதிகாரம் 19 முதல் 30 வரை உள்ள வசனப்பகுதியில் தீமோத்தேயுவை பற்றியும், எப்பாப்பிரோதீத்துவை பற்றியும் வாசிக்கிறோம். பவுல் இவர்களுடைய நல்ல குணாதி-

சயங்களையும் அவர்கள் செய்த உதவிகளையும் பவுல் நன்றியுள்ள மனதோடு குறிப்பிடுவதை காண்கிறோம்.

பிலிப்பியர் 4: 15 - 17 வரையான வசனங்களில் பிலிப்பி சபையினர் தனக்கு செய்த உதவியை பவுல் குறிப்பிட்டிருப்பதை காண்கிறோம். இவை எல்லாவற்றிலும் பவுலின் நன்றி நிறைந்த உள்ளத்தை நாம் காண்கிறோம்.

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே! நாமும் இரட்சிக்கபட்ட புதிதில் எமது ஊழியத்தின் ஆரம்பத்தில் பொருளாதார ரீதியிலோ, ஆவிக்குரிய காரியங்களிலோ சபையில் எத்தனை பேர் எமக்கு உதவியிருக்கிறார்கள்! இவற்றை நாம் மறந்து குறை கூறித்-திரியாமல், இவர்களை எமக்கு கொடுத்த தேவனுக்கும் அவற்றை செய்த ஒவ்வொருவருக்கும் எமது நன்றிகளை வார்த்தையில் மாத்திரம் அல்லாமல் நமது கிரியைகளிலேயும் காண்பிப்போம்.

- Grace Fernando -

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படி செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களை குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

(1 தெசலோனிக்கேயர் 5:18)



## மோசே சீனாய் மலையில் ஏறிய 7 சந்தர்ப்பங்கள்

### இரட்சிப்பு
யாத்திராகமம் 19:3 - 19:7

### பரிசுத்தப்படுத்தப்படுதல்
யாத்திராகமம் 19:8 - 19:14

### அர்ப்பணிப்பு
யாத்திராகமம் 19:20 - 19:25

### கட்டளைகள்
யாத்திராகமம் 20:21 - 24:3

### பரிசுத்தஸ்தலம்
யாத்திராகமம் 24:12 - 32:7,15

### விண்ணப்பம்
யாத்திராகமம் 32:30 - 32:33

### பிரகாசம்
யாத்திராகமம் 34:4 - 34:29

# விரும்பாத திருப்பம்

"இல்லை என்போர் சிலர்,
இருந்தால் நலம் என்போர் சிலர்,
இல்லையோ என்போர் சிலர்,
இருப்பவரை அறியாதோர் பலர்"

பரிசுத்த வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய "வெளிப்படுத்தல்" எனும் புத்தகத்திலேயே மிகவும் பயங்கரமான வசனம் என்ன தெரியுமா?

பரிசுத்த வேதாகமமாவது, ஏறத்தாழ 40 தேவனுடைய மனிதர்கள் தேவ ஆவியினாலே ஏவப்பட்டு சுமார் 1600 வருட காலமாக எழுதிய பரிசுத்த வேத எழுத்துக்களின் தொகுப்பாகும்.

66 புத்தகங்களின் தொகுப்பாகிய பரிசுத்த வேதாகமத்திலே, அகிலத்தின் ஆரம்பம் முதல் அந்தம் வரை நடந்தவை, நடக்கவிருப்பவை மற்றும் அவற்றுக்கான காரணம் என மனிதன் நிச்சயம் அறிந்து கொள்ள வேண்டிய அனைத்தும் எழுதப்பட்டுள்ளன.

அந்த 66 புத்தகங்களில் கடைசி புத்தகம் தான் "வெளிப்படுத்தல்" என சுருக்கமாக அழைக்கப்படும் "திவ்விய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்" எனும் புத்தகம்.

உண்மையில் இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்தும் புத்தகமாகும். உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமை தொடங்கி அவரின் நித்தியகால மகிமை வரை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை எடுத்துரைக்கும் ஓர் புத்தகமாகும்.

அந்த வகையில், இனி வரும் காலத்தில், இந்த உலகத்தின் மீது வரப்போகும் நியாயத்தீர்ப்பை பற்றியும் இதிலே எழுதப்பட்டுள்ளது.

நிற்க, இந்த உலகத்தின் மீது ஏன் நியாயத்தீர்ப்பு வர வேண்டும்?

காரணம், எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர்கள் ஆனோம். நீதிமான் ஒருவனாகிலும் இல்லை, உணர்வுள்ளவன் இல்லை, தேவனைத் தேடுகிறவன் இல்லை, எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டு போனார்கள், நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

மனிதனின் இந்நிலைக்கு தேவனின் நியதியாவது பாவத்தின் சம்பளம் மரணம் என்பதாகும். எனில், மனிதர்கள் அழிவது ஒன்று தான் இதற்கு தீர்வா?

இங்கே தான் தேவன் தமது அளவில்லா அன்பையும் அனந்த ஞானத்தையும் வெளிப்படுத்துகிறார்.

பாவத்துக்கு உரிய தண்டனையை கொடுக்காவிட்டால் தேவன் நீதி உள்ளவர் அல்லர். அதே நேரம், தண்டனையை கொடுத்தால் மனிதரில் எவரும் மிஞ்சியிருக்கப்போவதில்லை.

ஆகவே, சர்வலோக நியாயாதிபதியாகிய அவரே பாவத்திற்கான தண்டனையை தம்மீது ஏற்றுக்கொள்ள விரும்பம் கொண்டார். தாமே மனிதனாக அவதரித்தார்; பாவமில்லாதவராய் வாழ்ந்தார்; பாவிகளாகிய நமக்கு உரித்தான மரணம் எனும் அந்த தண்டனையை பாவம் இல்லாத அவர் சிலுவையிலே தமது சரீரத்திலே சுமந்தார். அக்கிரமக்காரராகிய நமது இடத்திலே நமக்கு பதிலாக அவர் தன்னுயிர் கொடுத்து நமக்கான பாவ நிவிர்த்தி செய்தார். மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததினாலே மரணத்தின் வலிமையை உடைத்து இன்று அவரை நம்புவோருக்கு பாவ மன்னிப்பு அளிக்-

கிறார்.

பாவத்தின் சம்பளம் மரணம் என்ற போதிலும் தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய வாழ்வாய் இருக்கிறது.

நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். ஆனால், நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

இங்கனம், பாவத்திற்கு மன்னிப்பு உண்டெனில், இந்த உலகத்தின் மீது நியாயத்தீர்ப்பு வரவதற்கான அவசியம் தான் யாது?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்கு அதாவது, இயேசு கிறிஸ்துவே ஒரே ஆண்டவர்; அவர் எனக்காகவே சிலுவையில் இறந்தார் என முழுமையாய் நம்பி அவரிடம் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு வேண்டுவோருக்கு மன்னிப்பு உண்டு எனும் இந்நற்செய்திக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?

அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்கு உள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று.

இப்படியாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்புகிறவர்கள் மற்றும் நம்பாதவர்கள் என இரு பிரிவினர் இருக்கின்றதினால் அவரை நம்பாதவர்கள் இவ்வுலகத்திற்கு வரும் தேவ கோபாக்கினைகளால் மிகுந்த உபத்திரவங்களை அனுபவிக்கப்போகிறார்கள்.

வரவிருக்கும் அந்த பயங்கர உபத்திரவங்களை பற்றியும் வெளிப்படுத்தல் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

அந்த உபத்திரவங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்பாதவர்களை மட்டும் எவ்வாறு தாக்கும்? அவரை நம்புவோர் எப்படி அதிலிருந்து தப்புவார்கள்?

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகிறவர்களை அவர் அந்த உபத்திரவங்கள் வருவதற்கு முன்னதாகவே இரகசியமாக வந்து தாமிருக்கும் பரலோகத்திற்கு எடுத்து சென்று விடுவார். ஆகவே அவ்வுபத்திரவங்களை அவர்கள் அனுபவிக்க மாட்டார்கள்.

உபத்திரவங்கள் என்று சொல்லப்படுகிற நியாயத்தீர்ப்புகள் வருவதற்கு முன்னதாகவே இறந்து போகிறவர்களும் அந்த உபத்திரவங்களில் இருந்து தப்பி விடுவார்கள் அல்லவா என நினைக்கலாம். ஆம், அந்த உபத்திரவங்களில் இருந்து தப்பி விடுவார்கள். ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்பாதவர்களின் நிலைமை அதையும் விட மிக பரிதாபகரமானது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்பாமல் இறப்பவர்களின் பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படுவதில்லை என்பதால் மரணத்தின் போது உடலை விட்டு பிரியும் அவர்களின் ஆத்துமா நரகத்தை சென்றடைகிறது. அங்கே அந்த ஆத்துமா அக்கினியில் எரிந்து வேதனைப்படும். அங்கே அந்த அக்கினி அணைந்து போவதும் இல்லை; அங்கு ஆத்துமா அழிந்து போவதுமில்லை. என்றென்றைக்கும் நரக வேதனையை அனுபவித்தாக வேண்டும். இதுவே பாவத்திற்கான சம்பளமாகிய உண்மையான நித்திய மரணம்.

இந்த கட்டுரையிலே நாம் பல விடயங்களை கலந்துரையாடிவிட்டோம். ஆனால், இன்னும் முதல் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை.

பரிசுத்த வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தல் எனும் புத்தகத்திலேயே மிகவும் பயங்கரமான வசனம் என்ன தெரியுமா?

வெளி 16: 11 "தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனை தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை."

மிகுந்த உபத்திரவத்தின் பொழுதும், மக்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி தேவனிடம் வர விரும்பாத நிலையே மிக பயங்கரமானது.

மனந்திரும்புகிறவர்களை மன்னிக்கிறதற்கு நம்முடைய தேவன் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவர்.

ஆனால் பரிதாபகரமாக, மிகுந்த உபத்திரவங்களை அனுபவிக்கின்ற பொழுதிலும் மக்கள் மனந்திரும்ப விரும்பாமல் இருப்பதை வெளிப்படுத்தல் புத்தகத்திலே நான்கு முறை நாம் காண்கிறோம். அவையாவன:

வெளி 9:20 "அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவும் மாட்டாதவைகளாயும் இருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்கு தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டு மனந்திரும்பவுமில்லை."

வெளி 9:21 "தங்கள் கொலை பாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை."

வெளி 16:9 "அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தை தூஷித்தார்களேயல்லாமல் அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை."

வெளி 16:11 "தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை."

இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பானவர்களே, கிறிஸ்து இறந்தது உங்களுக்காகவும் தான். அவர் உங்களை நேசிக்கிறதினால் மனந்திரும்பி தம்மை நம்பும் படி உங்களை அழைக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான். நீங்கள் இருக்கும் இடத்திலேயே கண்களை மூடி, ஆண்டவர் இயேசு உங்களுக்காக சிலுவையில் தொங்கியதை நினைவுகூர்ந்து, "ஆண்டவரே என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுங்கள்" என கூறுங்கள். அவர் சிந்திய இரத்தம் உங்கள் சகல பாவங்களையும் நீக்கி உங்களை சுத்திகரிக்கும். இன்று முதல் நீங்கள் அவருடைய பிள்ளையாவீர்கள்.

மேலும் விபரம் அறிய விரும்புவீர்களாயின் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அறிவுக்கு எட்டாத தேவனுடைய அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாக வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

- S. Varaprasath -



# சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்

காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். (மாற்கு 01:15)

கிறிஸ்து இயேசுவின் மனித அவதாரம், அவரது பாடுகள், மரணம், நல்லடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலம் மனித குலத்தை நித்திய அழிவிலிருந்து மீட்டுக்கொள்வதற்காகத் தேவன் கிரியை செய்திருக்கிறார் என்பதே சுவிசேஷத்தின் அல்லது நற்செய்தி என்பதன் சாராம்சமாகும். (1 கொரிந்தியர் 15: 1 - 8)

பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டிலே சுவிசேஷம் என்ற சொல்லானது ஒரு சில இணைப்பெயர்களுடன் சேர்த்து எழுதப்பட்டிருப்பதை காணலாம். அவைகளைப் பற்றி இப்பகுதியில் அவதானிப்போம்.

## 1) தேவனுடைய சுவிசேஷம் (ரோமர் 1:1)

ரோமருக்கு எழுதிய நிருபத்திலே அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை தேவனுடைய சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவன் என்று அறிமுகஞ்செய்கிறார். இங்கே சுவிசேஷத்தின் மூலகாரணர் தேவனே என்பதை வலியுறுத்துகின்றார்.

எனவே, சுவிசேஷமானது சாதாரண மனிதர்களால் கொடுக்கப்பட்டதல்ல. சகலத்தையும் படைத்து ஆளுகை செய்யும் சர்வ வல்லமையுள்ள தேவனால் கொடுக்கப்பட்டிருப்பதால் அந்த சுவிசேஷத்தை மனிதர்கள் விசுவாசிக்க வேண்டும்.

## 2) கிருபையின் சுவிசேஷம் (அப்போஸ்தலர் 20: 24)

அப்போஸ்தலர் 20:24ம் வசனத்தில் தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் என்பதாகப் பவுல் கூறுகிறார். இங்கே கிருபையின் சுவிசேஷம் என்று பவுல் கூறும்பொழுது அந்த சுவிசேஷம் மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட காரணத்தை சுட்டிக் காட்டுகின்றார். அதாவது, அதைப் பெறுவதற்க மனிதனுக்கு எந்த வித தகுதியும் இல்லை. தகுதியற்ற மனிதருக்கு இலவசமாக, ஒரு ஈவாகவே அதைக் கொடுக்கின்றார். ஆகையால், மனிதன் அதைப் புறக்கணிக்காமல் சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும்.

## 3) கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 15:29, மாற்கு 1:10)

நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேன் என்று அறிந்திருக்கிறேன் என்பதாக அப்போஸ்தலன் பவுல் ரோமர் 15:29ல் குறிப்பிடுகிறார்.

மாற்குவும் கூட தனது நற்செய்தி நூலை “தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்” என்றே தொடங்குகிறார்.

ஆம்! சுவிசேஷத்தின் மையப்பொருள் அல்லது சாராம்சம் கிறிஸ்துவே: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனுக்குப் பதிலாக சிலுவையில் மரித்தார். நாம் பாவங்களுக்கு செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேதுரு 2: 24). இந்த மீட்பின் நிச்சயத்தைப் பெற மனிதர்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும்.

## 4) தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் (மாற்கு 01: 14)

இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்பதாக மாற்கு 1:14ல் வாசிக்கின்றோம்: தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் எனப்படும் பொழுது அந்த சுவிசேஷத்தின் விளைவு என்ன என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. அதாவது, சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிவோருக்கு கிடைக்கும் பிரதி பலன் தேவனுடைய ராஜ்யமாகும். சுவிசேஷத்தை விசுவாசிக்காதவர்கள் என்றென்றுமாய் நித்திய மரணத்திலே பங்கடைவார்கள். ஆகையால், ஒருவன் தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்க சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும்.

## 5) மகிமையான சுவிசேஷம் (2 கொரிந்தியர் 4:4)

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான் என்று 2 கொரிந்தியர் 4:4ல் பவுல் குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷம் என்று அவர் சொல்லும் போது அந்த சுவிசேஷத்தின் அதி உன்னதமான தன்மையையே குறிப்பிடுகின்றார். மனிதர்கள் அந்தகார இருளில் இருந்து ஆச்சரியமான ஒளிக்கு வரவழைக்கப்பட வேண்டுமெனில், சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும்.

## 6) என் சுவிசேஷம் (2 தீமோத்தேயு 2:8, ரோமர் 2:16, ரோமர் 16:26)

தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள் என 2 தீமோத்தேயு 2:8 இலும் ரோமர் 2:16, ரோமர் 16:26 ஆகிய வசனங்களிலும் அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்தை என் சுவிசேஷம் என்பதாக உரிமை பாராட்டுகின்றார். இவ்வாறாக சுவிசேஷத்தின் மீது விசுவாசிகளுக்கு உள்ள பொறுப்பை அவர் உணர்த்துகின்றார்.

விசுவாசிகளின் வாழ்வு சுவிசேஷ மயமாக்கப்பட்டதாகக் காணப்பட வேண்டும். அதாவது, நடமாடும் சுவிசேஷமாக விசுவாசிகள் தம்மை இவ்வுலகிற்கு விளங்கப்பண்ண வேண்டும்.

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் (1 கொரி 11:1) என்று அப்போஸ்தலன் பவுலைப் போல அறைகூவி அழைக்கின்றவர்களே உண்மையான விசுவாசிகள் ஆவர்.

“இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்கும் உள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்” (மத்தேயு 24:14)

சுவிசேஷமா? உலக சுகபோகமா? இரண்டில் எது வேண்டும். சொல் மனமே!

- M. Gnanendren -

# பரிசுத்த நகரம்



கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே (பரிசுத்த நகரம்) சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள். லூக்கா 19:38

இதுவே தேவனுடைய பரிசுத்த நகரம் என்கின்ற போது மாசில்லாத ஒரு மகிழ்ச்சி எழுகிறதை உணரக் கூடியதாய் இருக்கிறது

தேவனுடைய பரிசுத்த நகரத்திற்கு அழைக்கப்பட்ட, பரிசுத்த நகரத்துக்கு உருவாக்கப்பட்ட (சிருஷ்டிக்கப்பட்ட) எமது ஆதி பெற்றோர்கள் தேவனுடைய பாதுகாப்பில் மகிழ்ச்சியாய் சில நாட்கள் வாழ்ந்தனர். புாவம் அவர்களை சூழ்ந்துகொள்ள அவர்கள் தேவனால் துரத்திவிடப்பட்டனர்.

அவர் மனுஷனைத் துரத்திவிட்டு ஜீவ விருட்சத்துக்கு போகும் வழியை காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்கு கிழக்கே கேரூபீன்களையும், வீசி கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.

அன்றிலிருந்து மனுஷனுடைய பாவத்தின் எல்லைக்கு விடுதலை இல்லாமல் பாவப்பட்டியலின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமாய் கிடந்தது.

எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி ரோமர் 3:23

பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றது. சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பிக்கிறது.

இது இப்படியிருக்க இன்று மனுஷன் உணராதவனாய் வாழ்ந்து கொண்டு, தேவனுடைய பரிசுத்த நகரத்தை காணாது, நரகத்தின் வாசலில் நிற்கிறான்.


ரோமர் 6:1,2,12, “ஆகையால், என்ன சொல்லுவோம்? பாவத்துக்கு மரித்த நாம் இனி அதில் எப்படி பிழைப்போம்? கூடாதே. ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்கு கீழ்ப்படியத்தக்கதாக சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.

கர்த்தர் இயேசு எல்லா பாவத்தின் பாரத்தின் சுமையை சுமந்து சிலுவையில் மரித்து நாங்கள் அவருடைய ராஜ்யத்திற்கு (பரிசுத்த நகரம்) தகுதியானவைகளாகும்படிக்கு, நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளை போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள் (1 பேதுரு 2:24,25)

இயேசுவானவர் எங்களை எதற்கும் கட்டுப்படுத்துவதற்கு அல்ல, எல்லா கட்டுக்களிலிருந்தும் விடுதலையாக்கி நித்தியஜீவனுக்குரிய பரிசுத்த பாதையில் நாங்கள் சுதந்திரமாக அவரைப் பின்பற்றி நடக்கவேண்டியே வந்தார்.

- M. Gnanapragash -

# காலத்தின் சோதனை



இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்நாளின் ஒரு காலகட்டத்தில், கடினமான சூழ்நிலைகளுக்கூடாக கடந்து செல்கிறான். கிறிஸ்தவ விசுவாசிகள் இந்த பிரச்சனைகளுக்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. உலக மக்கள் தங்களுடைய கஷ்டங்கள் கவலைகளுக்கு விதி சாபம் என அர்த்தம் கூறும் அதே வேளை கிறிஸ்தவ விசுவாசி இதை தேவனை மையமாகக் கோண்ட கோணத்திலிருந்தே பார்க்கிறான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் கழுவி மீட்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம் எம்முடைய வாழ்வின் ஒவ்வொரு கடினமான சூழ்நிலைகளின் மூலமாகவும் தேவன் எமக்கு ஒரு முக்கியமான பாடத்தைக் கற்பிக்கிறார் என்பதை முழுமையாக விசுவாசிக்க வேண்டும்.

முக்கியமாக உலகலாவிய ரீதியில் அனைத்து நாடுகளையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கோவிட் 19 எனும் தொற்று நோய் மூலமாகக் கூட தேவன் நம்மை சோதித்து நம்முடைய கிஸ்தவ வாழ்க்கைக்கும் விசுவாசத்திற்கும் தேவையான சில முக்கியமான பாடங்களைக் கற்பிக்கிறார் என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே சோதனைக் காலங்களில் எமது வாரழ்வின் எந்தெந்த பகுதிகள் சோதிக்கப்படகின்றன என்பதைப் பார்ப்போம்.

## 1. தேவன் பேரில் உள்ள நம் விசுவாசத்தின் சோதனை

சோதனை காலங்களுக்கூடாக நாம் கடந்து செல்லும் போது தேவன் நம்முடைய விசுவாசத்தை விசே'மாக தேவன் பேரில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை சோதிக்கிறார் என்பதை நான் நம்புகிறேன். ஆகவே நாம் விசுவாசத்தைப் பற்றி பார்க்கும் போது அது ஒரு பரந்த விடயமாகக் காணப்படகிறது. ஆனாலும் கூட வாழ்க்கையின் கடினமால காலங்களில் தேவன் நம் விசுவாசத்தை சோதிக்கும் 3 பகுதிகளை நான் வகைப்படுத்தி உள்ளேன்.

## தேவனுடைய இறையாண்மை நோக்கத்தில் விசுவாசம்.

“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.” ரோமர் 8:28

“வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும், கர்த்தர் தமக்குச் சித்தமானதை எல்லாம் செய்கிறார்.” சங்கீதம் 135:6

தேவன் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசமானது இறையாண்மையின் அடிப்படையில் சோதிக்கப்படுகிறது.

நம் வாழ்க்கையில் நடைபெறும்

எதுவாக இருந்தாலும் சரி அதில் தேவனுக்கு ஒரு நோக்கம் இருக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அத்தோடு இவை எல்லாவற்றையும் அவர் நன்மைக்கு ஏதுவாக மாற்றுவார். எம்முடைய வாழ்க்கையின் எல்லா தனிப்பட்ட சூழ்நிலைகளுமே இனிமையா இருக்-காது என்றாலும் கூட தேவன் எல்லா சூழ்நிலைகளையும் ஒன்றினைத்து அதை நம் வாழ்க்கைக்கு நன்மையாக மாற்றுவார்.

நாம் ஒரு குறிப்பிட்ட உணவைத் தயாரிக்கும் போது அதில் பல பொருட்களை சேர்க்கிறோம். இதில் ஒவ்வொரு பொருளும் அதன் சுவை மற்றும் மணத்தில் வேறுபட்டதாகவே இருக்கும். ஆனால் இவை எல்லா பொருட்களையும் ஒன்றாக சேரத்து சமைக்கும் போது இறுதியில் சுவையான உணவு கிடைக்கப் பெறுகிறது. அது போலவே தேவன் எல்லாவற்றையும் நன்மைக்காக ஒன்றிணைக்கிறார். “எல்லாம் நன்மைக்கே” என உலகம் சொல்லும் விதமாக அல்ல.

நாம் கடினமான சூழ்நிலைகளுக்-கூடாக செல்லும் போது தேவன். அதன் பின்னணியில் உள்ள காரணங்களை விளக்க மாட்டார் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர் அதை செய்ய வேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில் அவர் இறையாண்மையுள்ள தேவன் அவரது இறையாண்னையின் நோக்கங்களை நிறைவேற்றுகிறார். யோபு அந்த துன்பங்களுக்கூடாக கடந்து சென்ற போது தேவன் அமைதியாகவே இருந்தார். எல்லாவற்றிற்குமேலாக தேவன் பேசத்தொடங்கிய போது அதன் பின்பு இருந்த காரியங்கள் ஒன்றையும் குறித்த அவர் வியக்க முற்படவில்லை. இறுதியாக யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக:தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.

அறிவில்லாமல் ஆலோசனையை மறைக்கிற இவன் யார்? ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியா-ததையும் அலப்பினேன் என்கிறேன்.

நீர் எனக்குச் செவிகொடும், அப்பொழுது நான் பேசுவேன்; நான் உம்மைக் கேள்விகேட்பேன், நீர் எனக்கு உத்தரவு சொல்லும்.

என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.

ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து நான் மனஸ்தாபப்படுகிறேன் என்றான்.

ஆகவே நாம் வாழ்க்கையில் கஷ்டமான சூழ்நிலைகளை எதிர் நோக்கும் போதும் சோதனைக்காலங்-களுக்கூடாக செல்லும் போதும் மீண்டும் நினைவுப்படுத்திக்கொள்ளுவொம் நம்முடைய விசுவாசத்தையும் தேவனு-டைய இறையாண்மை நோக்கத்தில் நம்மடைய நம்பிக்கையையும் சோதிப்-பதில் தேவன் அக்கறைக்காட்டுகிறார் என.

- Dinesh Malcolm Paul -

# பரிசுத்த தேவனுக்கு முன்பாக எமது நிலை

| முன்னே: | இப்பொழுதோ: |
|---|---|
| நாம் உக்கிர கோபாக்கினைக்கு உட்பட்டவராயிருந்தோம்.<br>(ரோமர் 1:32/ 2:8) | இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறோம்.<br>(1 பேதுரு 2:10) |
| நாங்கள் அசுத்தப்படுத்தப்பட்டவராய் இருந்தோம்.<br>(மாற்கு 7:20) | சுத்தமாயிருக்கிறோம்<br>(யோவான் 13:10) |
| எம்மில் இருக்கும் தேவ சாயல் குழப்பமடைந்து மங்கிப்போனதாய் இருந்தது.<br>(ரோமர் 3:23/ யோவான் 8: 44/<br>1 யோவான் 3:8) | திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாயிருக்கிறோம்<br>(2 பேதுரு 1:4/ ரோமர் 8:29) |
| நாங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம்.<br>(யோவான் 8:34/ ரோமர் 3:9) | பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளாயிருக்கிறோம்<br>(ரோமர் 6:18/ 1 கொரிந்தியர் 7:22) |
| ஆவிக்குரிய மரணத்திற்கு உட்பட்டவர்களாக இருந்தோம்.<br>(எபேசியர் 2:1/ ரோமர் 6:23) | உயிர்ப்பிக்கப்பட்டு புதிதான ஜீவனுள்ளவர்களாய் இருக்கிறோம்<br>(எபேசியர் 2:1/ ரோமர் 6:4) |
| நாம் தேவனிடத்திலிருந்தும், ஏனைய மனிதர்களிருந்தும் பிரிக்கப்பட்டவர்களாக இருந்தோம்.<br>(எபேசியர் 2:12 / ஏசாயா 59:1,2) | ஒன்றாகி, ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாகியுள்ளோம்<br>(எபேசியர் 2:14,16) |
| நாம் இருளில் இருந்தோம்.<br>(எபே 5:8) | கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கிறோம்<br>(எபேசியர் 5:8) |
| நாம் தேவனுடைய எதிரிகளாக இருந்தோம்.<br>(ரோமர் 5:10) | தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.<br>(ரோமர் 5:1) |

- Kanistella Gnanapragash -

# வாக்குத்தத்தங்கள் 2021

அன்பான சகோதரனே/ சகோதரியே, புத்தாண்டுக்கென வாக்குத்தத்த வசனங்கள் சிலவற்றை பெற்றுக்கொள்ளும் பழக்கம் நமக்குண்டு. இரு ஓர் ஆவிக்குரிய செயலாகும். காரணம், 2 பேதுரு 1:4 கூறுகிறது, " திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." என்று. வழமை போலவே இம்முறையும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலும் ஏவுதலும் அமைந்திருக்கிறது என நாம் உணருகிறோம். ஏனெனில், இம்மூன்று வாக்குத்தத்த வசனங்களையும் நாம் ஒன்று சேர்த்து பார்க்கும் போது, மிக முக்கிய மும்முக செய்தியை அவை தருகின்றன.




இவ்வாக்குத்தத்தங்களை அவை கொடுக்கப்பட்டுள்ள ஒழுங்கில் நாம் தியானித்தால் அவற்றுக்கிடையிலான தொடர்பை கண்டுகொள்ளலாம்.

முதலாம் வாக்குத்தத்தமானது விசுவாசியாகிய தனி நபருக்கும் குடும்பங்களுக்குமானதாகும். இரண்டாம் வாக்குத்தத்தமானது முழு சபைக்கு-மானது; உள்ளூர் சபையாக நாம் அதை பற்றிக்கொள்ளலாம். மூன்றாம் வாக்குத்தத்தமானது முழு உலகத்திற்-குமான எதிர்காலத்தை பற்றிய தீர்க்கதரிசனமாகும்.

### வாக்குத்தத்தம் 1

**"முதலாவது தேவனுடைய இராஜ்-யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்." மத்தேயு 6:33**

தனிநபராக அல்லது குடும்பமாக பார்க்கும் போது நமக்கு இருக்கும் பிரச்சனை என்னவென்றால் நாம் தேவனையோ அவருடைய நீதியையோ தேடாமலிருப்பது அல்ல; அதை முதலாவது தேடாமலிருப்பதே. எனக்கு நேரமிருந்தால் சபைக்கு போவேன் அல்லது ஊழியம் செய்வேன். எனக்கு பணம் எஞ்சியிருந்தால் தேவனுக்கு கொடுக்கிறேன். என்னுடைய பிள்ளைகளுக்கு தனியார் வகுப்புகளோ ஏனைய கல்வி செயற்பாடுகளோ இல்லாவிட்டால் அவர்களை சபைக்கு அனுப்புகிறேன். இப்படியாக நாம் எப்பொழுதுமே மிச்ச மீதியையே தேவனுக்கு கொடுக்கிறோம்.

நம் மனப்பான்மை மாற வேண்டும். நாம் கர்த்தரை பின்பற்ற வேண்டிய விதமாக பின்பற்றவில்லை. ஆம், நாம் தேவனையும் அவருடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறோம். ஆனால், அவற்றுக்கு நாம் கொடுக்கும் இடமோ இரண்டாவது, மூன்றாவது அல்லது கடைசி இடமாயிருக்கிறது.

ஆண்டவர் இந்த வார்த்தைகளை சொன்ன பின்னணியானது உணவு, உடை என்பவை பற்றியதாகும். அவை நம் வாழ்வுக்கு அடிப்படையானவை ஆகும். அந்த அடிப்படைத்தேவைகளை பொருத்தமட்டில் கூட, "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்." என்றார். ஆகவே இந்த வாக்குத்தத்தம் உங்களுக்கு ஆசீர்வாதத்தை தரவேண்டுமாயின், நீங்கள் இந்த வாக்குத்தத்தின்படி தேவ வார்த்தைக்கும் ஜெபத்துக்கும் குடும்ப ஜெபத்துக்கும் முதலிடம் கொடுக்க வேண்டும். சபை ஐக்கியத்துக்கு முதலிடம் கொடுத்த பின்பே உங்கள் மற்ற அலுவல்கள் அனைத்தையும் நீங்கள் திட்டமிட வேண்டும்.

"என்னால் இன்று சபை ஐக்கியத்துக்கு வர முடியாது. எனக்கு வேலை இருக்கிறது" என்று அல்லது "என்னால் இந்த ஊழியக்காரியத்தில் ஈடுபட முடியாது. எனக்கு வேறு அலுவல்கள் இருக்கின்றன" என எவ்வளவு பெருமையுடன் நாம் கூறுவதுண்டு!

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அளவு மட்டத்தை குறித்து விட்டார்; அவர் மாற மாட்டார். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள்," என அவர் கூறியுள்ளார். அதை நாம் செய்ய ஆரம்பித்தால், எதிர்வரும் வாரத்திற்கு என நாம் வைத்துள்ள நிகழ்ச்சித்திட்டத்தை மாற்ற வேண்டியதாகிவிடும். ஆம் அன்பு சகோதரனே/ சகோதரியே, தேவனுக்கும் அவருடைய இராஜ்யத்துக்கும் அவருடைய நீதிக்கும் முதலிடம் கொடுத்தலை விசுவாசிகள் செய்தாக வேண்டும்.

நாம் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் இதை செய்யும் படியாக நமக்கு சவால் விடுக்கப்பட்ட போது தேவனுடைய காரியங்களில் ஈடுபட போதுமான நேரம் கிடைக்கும் விதத்தில் மற்ற யாவையும் ஒத்தி வைப்பதற்கு நாம் விருப்பம் கொண்டோம்.

அன்பான சகோதரனே/ சகோதரியே, தேவ வார்த்தைக்கு செவிகொடுங்கள்; தேவ வார்த்தையை பின்பற்றுங்கள்; வாக்குத்தத்தை நம்புங்கள்.

## வாக்குத்தத்தம் 2

### "உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர்" செப்பனியா 3:17

இரண்டாம் வாக்குத்தத்தமானது சபைக்குள் செயற்படும் கர்த்தரை பற்றியதாகும்.

தேவனுடைய ஜனங்கள் ஒன்று கூடும் போது அவர்கள் நடுவே தேவன் செயல்படுகிறார் என்பது மிக தன்னிகரற்றதொன்றாகும். ஆம், வாழ்க்கை மாற்றம் பெறுதல் எனும் மாபெரும் அற்புதம் நிகழ்கிறது. சுவிசேஷ கூட்டங்களுக்கு வருபவர்கள் பகிரங்கமாக மனந்திரும்பி கிறிஸ்து-விடம் வந்த ஒரு காலம் நமக்கிருந்தது. ஆனால், கர்த்தர் நம் நடுவே பலமாய் செயற்படுவார் என நாம் எதிர்பார்ப்பதில்லை. எனவே கர்த்தரும் செயற்படாதிருக்கிறார்.

சபை ஐக்கியமானது வெறுமனே புறணி, கேலி, அரசியல் மற்றும் வேறு விடயங்களை பேசுகிற இடமாகியுள்ளது. ஆனால் தேவன் நம் நடுவே தமது தெய்வீக பலத்தைக்கொண்டு பலமாய் செயற்பட விரும்புகிறார்.

எனவே, தேவன் மீண்டும் நம் நடுவே செயற்பட என இவ்வருடம் நாம் இந்த வாக்குத்தத்தத்தை நம்ப வேண்டும். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் போது மக்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி கிறிஸ்துவிடம் வருவதை காண நாம் ஆசை கொள்ள வேண்டும். அந்நாட்களில் நாம் கண்டது தெட்டத்-தெளிவான வாழ்க்கை மாற்றமாகும். அக்காலங்கள் மீண்டும் வர வேண்டும். தேவன் நம் நடுவே அந்த வல்லமையோடு செயற்பட வேண்டும்.

## வாக்குத்தத்தம் 3

**“பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.” ஆபகூக் 2:14**

மூன்றாம் வாக்குத்தத்தமானது எதிர்காலத்தை பற்றியதாகும். ஏசாயா ஏற்கனவே சகாப்த ஆட்சிக்காலத்தை (ஆயிரம் வருட அரசாட்சி) பற்றி ஏசாயா 11:9ல் கூறியதையே ஆபகூக் இங்கு மீண்டும் மேற்கோள் காட்டுகிறார். இது நிறைவேறுவது சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதால் அல்ல. இது தேவனுடைய இறையாண்மையின் செயல். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியின் மீது ஆயிரம் வருடங்கள் அரசாள வரும் போது, அந்த காலத்திலே, கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் பூமி நிறைந்திருக்கும்.

நாம் வெற்றியின் பக்கம் இருக்கிறோம் என்பதனை இந்த வாக்குத்தத்தம் நமக்கு நினைப்-பூட்டுகிறது; இறுதி வெற்றி கர்த்தருக்கே. இந்த உலகத்தில் பல இராஜாக்கள், இராணிகள், சனாதிபதிகள், பிரதம மந்திரிகள் இருந்தாலும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தனது இரண்டாம் வருகையிலே தன்னை வெளிப்படுத்-துகையில் மகாராஜாவின் இடத்தை அவர் தனதாக்கிக்கொள்வார். ஆம், நம்முடைய இராஜா பூமியின் இராஜாக்கள் எல்லாருக்கும் மேலாய் உயர்ந்திருப்பார்.

ஆகவே, அன்பான சகோதரனே/ சகோதரியே, நாம் வெற்றியின் பக்கம் உள்ளோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடனே கூட அரசாள்வதற்காக தேவன் தம்முடைய மக்களை தயார் செய்து கொண்டிருக்கிறார்.

எதிர்காலத்தை அறிந்தவர்களாக நாம் நம்முடைய வாழ்வை தேவனுக்கு அடிபணியச்செய்ய வேண்டும்.

நீங்கள் எதிர்பார்த்திருக்கும்
முடிவை உங்களுக்கு
கொடுக்கும்படிக்கு நான்
உங்கள்பேரில் நினைத்திருக்கிற
நினைவுகளை அறிவேன் என்று
கர்த்தர் சொல்லுகிறார்
(எரேமியா 29:11)

# உங்களுக்கு தெரியுமா?

1. எஸ்தரின் மறுபெயர் என்ன?
2. பிரசங்கத்தை கேட்டு நித்திரையானதால் இறந்த வாலிபன் யார்?
3. யூதாஸ்காரியோத்துக்கு பதிலாக சேர்த்துக்கொள்ளப்பட்டவன் யார்?
4. தான் செய்த தூக்கிலேயே தூக்கிலடப்பட்டவன் யார்?
5. ஒரு வைத்தியரால் எழுதப்பட்ட சுவிசேஷ புத்தகம் எது?
6. முதலாம் ஊழியப்பயணத்தில் பவுலுடன் சென்றவர் யார்?
7. கல்லெறியப்பட்டு இறந்த முதலாவது கிறிஸ்தவன் யார்?

**விடைகள்**

1. அத்சாள் (எஸ்தர் 2:7)
2. ஐத்திகு (அப்போஸ்தலர் 20:7-11)
3. மத்தியா (அப்போஸ்தலர் 1:15-26)
4. ஆமான் (எஸ்தர் 7:10)
5. லூக்கா (கொலோசெயர் 4:14)
6. பர்னபா (அப்போஸ்தலர் 13:1-4)
7. ஸ்தேவான் (அப்போஸ்தலர் 7:54-60)


## இணையத்தளத்துக்கூடான வேத படிப்பு



வெளிப்படுத்தின விசேஷம்



யாக்கோபு



லேவியராகமம்

தபால் அல்லது மின்னஞ்சல் மூலமாக “ஜீவ ஒளி” சஞ்சிகையை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் தயவுசெய்து கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கூடாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

## CHRISTIAN FELLOWSHIP CENTRE




(+94) 112581901
(+94) 773595533
cfellowship@sltnet.lk
www.christianfellowshipcentre.com
CFC Colombo